இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம்

---

*[1994, டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1994 டிசெம்பர் மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

## 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம்.

[1994, திசெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ. 52/94

1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படும் அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2) பகிரங்க அலுவலர் ஒருவரினாலான அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின், உள்ளூரதிகாரசபையின் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் ஓர் அலுவலர் ஒருவரினாலான அடிப்படை உரிமையொன்றின் மீறுகை அல்லது வேறு அநீதி பற்றிய முறைப்பாடொன்று அல்லது சார்த்துகையொன்று ஓம்புட்சுமானுக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலானதொரு கடிதத் தொடர்பின்மூலம் செய்யப்படலாம்." :

(2) அப்பிரிவின் (2) உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(3) ஓம்புட்சுமான் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடொன்று அல்லது சார்த்துகையொன்று பகிரங்க அலுவலர் ஒருவரால் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், உள்ளூரதிகாரசபையின் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் அலுவலரொருவராலான அடிப்படை உரிமையொன்றின் மீறுகையினை அல்லது வேறு அநீதியினை வெளிவிடுகின்றதெனக் கருதுகின்றவிடத்து, அவர் அத்தகைய முறைப்பாட்டை அல்லது சார்த்துகையை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அவற்றிற்கமையவும் புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புலனாய்வு தொடங்குவது பற்றிப் பகிரங்க மனுக்கள் குழுவுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) ஓம்புட்சுமான் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடொன்று அல்லது சார்த்துகையொன்று பகிரங்க அலுவலர் ஒருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின், உள்ளூரதிகாரசபையின் அல்லது

இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் அலுவலரொருவரானவர் அடிப்படை உரிமையொன்றின் மீறுகையை அல்லது வேறு அநீதியினை வெளிவிடவில்லையெனக் கருதுகின்றவிடத்து, அத்தகைய முறைப்பாட்டை அல்லது சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கு அவர் மறுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய முறைப்பாட்டை அல்லது சார்த்துரைகளைப் புலனாய்வு செய்யவில்லை என்ற அவரது முடிவைப் பகிரங்க மனுக்கள் குழுவுக்கும் அத்தகைய முறைப்பாட்டை அல்லது சார்த்துரையைச் செய்த ஆளுக்கும் அத்தகைய முடிவைச் செய்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அறிவித்தலும் வேண்டும்." ; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை, அப்பிரிவின் முறையே (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "தமது முடிவைப் பகிரங்க மனுக்கள் குழுவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பகிரங்க மனுக்கள் குழுவுக்கும், புலனாய்வின் விடயப் பொருளான முறைப்பாட்டை அல்லது சார்த்துரையைச் செய்த ஆளுக்கும் அவரது முடிவை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அதில் உள்ள "11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனாக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பத்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் அல்லது 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஒம்புட்ஸ்மானின் தீர்மானம்.

17. (1) புலனாய்வு முடிவடைந்ததன்மேல் ஒம்புட்ஸ்மான் :—

(அ) ஓர் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதா அல்லது மீறப்படும் சாத்தியம் இருந்ததா; அல்லது

(ஆ) புலனாய்வின் விடயப்பொருளாயிருந்த ஏதேனும் முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை—

(i) சட்டத்திற்கு முரணானதா;

(ii) நிகழ்வுப்பிழையின் அல்லது சட்டப்பிழையின் மீது முற்றாக அல்லது பகுதியாக அமைந்திருந்ததா,

(iii) நியாயமற்றதா, நீதியற்றதா, அடக்குமுறையானதா அல்லது நகாதமுறையில் ஓரங்காட்டப்பட்டதா அல்லது வேறு வகையில் தவறானதா;

(iv) நியாயமற்றதாக, நீதியற்றதாக, அடக்குமுறையானதாக அல்லது தகாதமுறையில் ஓரங்காட்டப்பட்டதாக இருக்கின்ற அல்லது இருக்கக்கூடியதொரு வழக்காறுக்கிணங்கியதா; அல்லது

(v) தற்றுணிபொன்று—

(அ) தகாத நோக்கமொன்றுக்காகப் பிரயோகிக்கப்பட்டிருப்பின், அல்லது இயைபில்லாத கருதுகோள்களைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன்மூலம் பிரயோகிக்கப்பட்டிருப்பின் அல்லது முக்கிய கருதுகோள்களைக் கருத்துக்கெடுக்கத் தவறியதன்மூலம் பிரயோகிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(ஆ) ஓம்புட்சுமானின் அபிப்பிராயத்தில் காரணம் அளிக்கப்பட்டு இருக்கவேண்டியதாக இருந்த போதிலும் காரணம் அளிக்கப்படாதிருப்பின்.

அத்தகைய தற்றுணிபைப் பிரயோகிக்கையில் செய்யப்பட்டதா அல்லது புரியப்பட்டதா என்பது பற்றிய பிரச்சினை உள்ளிட்ட அல்லது வேறு அநீதி இழைக்கப்பட்டதா அல்லது இழைக்கப்படும் சாத்தியம் இருந்ததா என்பது பற்றியும்; அல்லது

(vi) நியாயமற்ற தாமதத்தினால், அக்கறையின்மையினால் அல்லது பாராமுகத்தினால் விளைவிக்கப்பட்டதா என்பது பற்றியும்,

தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஓம்புட்சுமான் அவரது தீர்மானத்தை அதற்கான காரணங்களுடன் சேர்த்து, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கும், சம்பந்தப்பட்ட திணைக்களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகார சபை அல்லது ஏனைய நிறுவனம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அமைச்சருக்கும் அத்துடன் பகிரங்க மனுக்கள் குழுவுக்கும் அறிக்கை செய்தல் வேண்டும்.

(3) (அ) அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டிருக்கின்றதா அல்லது மீறப்படும் சாத்தியம் இருக்கின்றதா அல்லது வேறு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டதா அல்லது இழைக்கப்படும் சாத்தியம் இருந்ததா என ஓம்புட்சுமான் தீர்மானிக்கின்ற ஏதேனும் விடயத்தில், ஓம்புட்சுமான் அவர் பொருத்தமானவையெனக் காணும் அத்தகைய விதப்புரைகளை அவரது அறிக்கையில் செய்யலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பத்தில்

அவ்வாறு விதப்புரைகளைப் பயனுறுத்துவதற்கு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின், அவற்றைக் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அறிவிக்குமாறு நிறுவனத்தின் தலைவரைத் தேவைப்படுத்தலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஒம்புட்சுமன்—

(i) கருமம் மீளச் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும் என;

(ii) செய்யாமை சீராக்கப்படவேண்டும் என;

(iii) முடிவு இல்லாதாக்கப்படவேண்டும் என அல்லது வேறுபடுத்தப்படவேண்டும் என;

(iv) அத்தகைய முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை எந்த வழக்காறினை அடிப்படையாகக் கொண்டதோ அந்த வழக்காறு மாற்றப்பட வேண்டுமென;

(v) அத்தகைய முடிவுக்கான, விதப்புரைக்கான, செயலுக்கான அல்லது செய்யாமைக்கான காரணங்கள் தரப்படவேண்டுமென

விதித்துரைக்கலாம்.

(இ) அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள், ஒம்புட்சுமானுக்குப் போதியதாக அல்லது நேர்தானதாகத் தோன்றும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையாயின் ஒம்புட்சுமான் அவதானிப்புக்கள் எவையேனுமிருப்பின் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், அவரது அறிக்கையின் பிரதியொன்றை சனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரினால் செய்யப்பட்ட அவதானிப்புக்கள் எவையேனுமிருப்பின் அவற்றை ஒம்புட்சுமான் அறிக்கையுடன் இணைத்தல் வேண்டும்.

(ஈ) அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் ஒம்புட்சுமானுக்குப் போதியதாக அல்லது நேர்தானதாகத் தோன்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஒம்புட்சுமான் அவரது அறிக்கையின் பிரதியொன்றை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஒரு கூற்றுடன் சேர்த்து சனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.